**செய்தி வெளியீடு எண்: 562** **நாள்: 30.08.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (30.8.2017) காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் நடைபெற்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

தமிழ் மக்களின் இதயங்களில் நிறைந்திருக்கும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

நீதியின் செங்கோல்!
அன்பின் களஞ்சியம்!
பண்பின் சிகரம்!
கொள்கையின் கூடாரம்!
கொடையின் இலக்கணம்!
பாசத்தின் பாசறை!
பொன்மனச் செம்மல்!
பாரத ரத்னா!

மாண்புமிகு புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு
உங்களையெல்லாம் சந்திப்பதில்
பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!
முன்னிலையுரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
திரு. **பா.பெஞ்சமின்** அவர்களே!
வரவேற்புரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர்
திரு.வெங்கடேசன் அவர்களே!

வாழ்த்துரை வழங்க அமர்ந்துள்ள
காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்
திருமதி. **கே.மரகதம் குமரவேல்** அவர்களே!

ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு.**கே.என்.இராமச்சந்திரன்** அவர்களே!

தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
டாக்டர் **ஜெ.ஜெயவர்தன்** அவர்களே!

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு.**கே. பழனி** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
திரு. **திண்டுக்கல் சி. சீனிவாசன்** அவர்களே!
திரு. **கே.ஏ. செங்கோட்டையன்** அவர்களே!
திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்களே!
திரு.**எஸ்.பி. வேலுமணி** அவர்களே!
திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!

டாக்டர் **வி.சரோஜா** அவர்களே!
திரு. **எம்.சி.சம்பத்** அவர்களே!
திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!
திரு. **ஆர்.காமராஜ்** அவர்களே!
திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!

திரு. **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** அவர்களே!
டாக்டர் **சி.விஜயபாஸ்கர்** அவர்களே!
திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!
திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!
திரு.**ஆர்.பி. உதயகுமார்** அவர்களே!

திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!
திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!
திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!
டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!
திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!

டாக்டர் **எம்.மணிகண்டன்** அவர்களே!
திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!
திரு. **க. பாண்டியராஜன்** அவர்களே!
திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!
திரு.**சேவூர் எஸ்.இராமச்சந்திரன்** அவர்களே!

திருமதி. **எஸ்.வளர்மதி** அவர்களே!
திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர்
திருமதி **பா.வளர்மதி** அவர்களே!
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **பா.பொன்னையா** அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட செயலாளர்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு.சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே!

காஞ்சிபுரம் மேற்கு மாவட்ட செயலாளர்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே!

காஞ்சிபுரம் மத்திய மாவட்ட செயலாளர்
திரு.ஆறுமுகம் அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.சோமசுந்தரம் அவர்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆன்மீகம், கல்வி, கலை, அரசியல்
ஆகியவற்றால் உரமேற்றப்பட்டு
வளமாக்கப்பட்ட பூமி காஞ்சிபுரம்.

நகரங்களில் சிறந்தது “காஞ்சி நகரம்” எனப்
பொருள்படும்படி “நகரேஷு காஞ்சி” என ஆன்றோர்கள்
அழைத்தார்கள்.

காஞ்சிபுரம் இரண்டாம் நூற்றாண்டுக்கு
முந்தைய பழமை வாய்ந்த நகரம் என்று
பதஞ்சலி முனிவர் எழுதியுள்ளார்.

தொண்டை மண்டலத்தின் தலைநகரமாகவும்,
அதன்பிறகு 9ஆம் நூற்றாண்டுவரை
பல்லவர்களின் தலைநகரமாகவும்,
காஞ்சிபுரம் விளங்கியிருக்கிறது.

ஏழாம் நூற்றாண்டுக்கு முன்
ராஜசிம்ம மன்னரால் கட்டப்பட்ட
காஞ்சி கைலாசநாதர் கோயில்
இந்த மண்ணுக்கு பெருமை சேர்க்கிறது.

அப்பர், சுந்தரர் மற்றும் சம்பந்தரால் பாடப்பெற்றது
இந்த திருக்கோயில்.

108 திவ்ய தேசங்களுள் ஒன்றான
அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோவிலால்
காஞ்சிபுரம் பெரும் புகழைப் பெற்றுள்ளது.
இந்த திருக்கோயிலின் பெருமையை
12 ஆழ்வார்களும் பாடியுள்ளார்கள்.

19 பிரகார விமானங்கள், 400 தூண்கள்,
நூறுகால் மண்டபம், அழகிய சிற்பங்கள்
ஆகியவற்றைக் கொண்ட இந்தத்
திருக்கோயிலைப் பார்த்து வெளிநாட்டவர்கள்
பெரும் வியப்படைகின்றனர்.

காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயில்
சக்தி பீடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
காஞ்சி குமரக்கோட்டத்தில் உறையும் முருகனை
அருணகிரிநாதர் பாடியுள்ளார்.
கந்த புராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார்
காஞ்சி குமரக் கோட்டத்தைச் சேர்ந்தவர்.

கர்நாடக நவாபுகளால் கட்டப்பட்ட
300 ஆண்டுகள் பழமை வாய்ந்த
ஜும்மா மசூதியும் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு
பெருமை  சேர்க்கிறது.

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயில்
பக்தர்களை கவர்ந்திழுக்கும் புனித இடமாக
கருதப்படுகிறது.

சான்றோர்களும், ஆன்றோர்களும்
கல்விமான்களும் அதிகமாக பிறந்த, வாழ்ந்த
அறிவுப்பூமி இந்த காஞ்சிபுரம்.

காஞ்சியில் '**கடிகா**' என்னும்
கல்விப் பெருங்கூடம் இருந்ததையும்,
அசோகரின் ஸ்தூபி இருந்ததையும்
சீனப்பயணி யுவான் சுவாங் எழுதியுள்ளார்.

நளவெண்பா எழுதிய புகழேந்திப் புலவர்
காஞ்சிபுரம் மாவட்டத்துக்குச் சொந்தக்காரர்.

100 வயது வரை வாழ்ந்த
காஞ்சி மடத்தின் 68வது மடாதிபதி காஞ்சி
சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகர சுவாமிகள்
இந்த மண்ணில் அறமாகவும் அருளாகவும் கலந்திருக்கிறார்.

வைணவம், சைவம், சமணம், பௌத்தம்,
கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய அனைத்து
மதங்களையும் தன் குழந்தைகளாக அரவணைத்து
அவற்றைப் பாதுகாக்கும் தாயாக விளங்குவது
இந்த காஞ்சி மாவட்டம்.

63 சிவனடியார்களின் வரலாறுகளைத்

தொகுத்து 'பெரிய புராணம்' என்னும்
காப்பியத்தை தமிழுக்கும், ஆன்மீகத்திற்கும்
வழங்கிய சேக்கிழார் பெருமான் இந்த
மாவட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் வாழ்ந்தவர்.

63 நாயன்மார்களில்
திருக்குறிப்பு தொண்டை நாயனார்,
ஐயடிகள் காடவர்கோன் நாயனார்,
கழற்சிங்கர் நாயனார் மற்றும் சாக்கிய நாயனார்
ஆகிய நால்வரும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச்
சார்ந்த சிவனடியார்கள்.

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார்,
திருமழிசை ஆழ்வார், வேதாந்த தேசிகர்
போன்ற வைணவ மகான்களை ஆன்மீக பலமாக
கொண்ட பூமி, இந்த காஞ்சிபுரம்.

**"வைணவ புரட்சித்துறவி"** என அழைக்கப்பட்ட
ஸ்ரீராமானுஜர் இம்மாவட்டத்தைச் சேர்ந்த
திருபெரும்புதூரில் ஆயிரம் வருடங்களுக்கு
முன் அவதரித்தவர்.

நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராக
விளங்கிய தத்துவஞானி, **தருமபாலர்**,
சீனநாட்டில் புத்தத் திருமடம் அமைத்த
**போதிதர்மர்** ஆகியோர் இங்கு பிறந்து
உலகப் புகழ் பெற்றவர்கள்.

தான் வாழ்ந்த காலத்திலேயே தன் செல்வம்
முழுவதையும் தர்ம கூடங்களும், கல்வி கூடங்களும்
கட்டுவதற்கு செலவு செய்த வள்ளல் பச்சையப்பர்
வாழ்ந்த தர்ம பூமி இந்த காஞ்சிபுரம்.

**குடவோலை** முறையில் தேர்தல் நடத்தி
கிராமத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்
ஜனநாயக முறையை முதன்முறையாக
இந்தியாவிற்கு அறிமுகம் செய்வித்த பெருமை
இந்த மாவட்டத்தைச் சார்ந்த உத்திரமேரூருக்கு உண்டு.

உலக சுற்றுலா பயணிகளை பிரமிக்க வைக்கும்

கல்லிலே கலை வண்ணம் கொண்ட
மாமல்லபுரம் தமிழர்களின் கலை, ஓவியம்,
கட்டடக்கலை மற்றும் அவற்றின் நுணுக்கங்களை
உலகம் அறியச் செய்தது இந்த மாவட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டம் பன்னாட்டு பயணிகளை
கவர்ந்திருக்கும் சுற்றுலா மையமாக விளங்குவதுடன்,
பன்னாட்டு பறவைகளையும் கவர்ந்திழுக்கும்
பறவைகளின் சரணாலயமாக திகழும்
வேடந்தாங்கலையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்தனை ஆன்மீக பலம் கொண்டதால்தான்..
காஞ்சிபுரத்தில் வாழ்ந்தாலே
முக்தி கிடைக்கும் என்கிறார்கள்.

காஞ்சிபுரத்தை **‘கோவில்களின் நகரம்’** என்று
அழைப்பதைப் போலவே, **‘ஏரிகளின் மாவட்டம்’**
என்றும் அழைக்கலாம்.

இந்த மாவட்டத்தில் மட்டும்
சுமார் 2000 ஏரிகள் உள்ளன. இங்கு நடைபெறும்
விவசாயமும் ஏரிப் பாசனத்தையே நம்பி இருக்கிறது.
இங்கு நான்காயிரத்துக்கும் மேலான குளங்களும்
குட்டைகளும் உள்ளன.

அதிகமான கல்விச் சாலைகளையும்,
அதிகமான தொழிற்சாலைகளையும்,
அதிகமான பட்டு தயாரிப்புகளையும் கொண்ட மாவட்டம் இது.

**‘காஞ்சிக்குப் போனால் காலாட்டிப் பிழைத்துக் கொள்ளலாம்’** என்ற பழமொழி
காலம் காலமாக வழங்கப்பட்டு வருகிறது.
இன்றைக்கும் காஞ்சியில் நெசவுத் தொழில்
பிரதான தொழிலாக நடந்து வருகிறது.

இப்படி காஞ்சியின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆன்மிகப் பலமும், அறிவுப் பலமும் கொண்ட
இந்த மண், அரசியல் பலத்திற்காக,
பேரறிஞர் அண்ணா அவர்களை தோற்றுவித்து,

உலக வரலாற்றில் ஒரு நிரந்தரமான
இடத்தைப் பிடித்திருக்கிறது.

பகுத்தறிவு முளைத்தது ஈரோட்டில் என்றால்,
அது துளிர் விட்டு வளர்ந்தது
காஞ்சிபுரத்தில் என்று உங்களோடு சேர்ந்து நானும்
பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
இதே காஞ்சிபுரத்தில் 8.2.2003 அன்று
பேசும்போது, காஞ்சிக்கும் கழகத்துக்கும் உள்ள
தொடர்பை மிகத் தெளிவாகக் கூறியிருந்தார்கள்.

**“எந்தப் பெருமகனின் பெயரை நமது இயக்கத்தின்
பெயரிலேயே வைத்திருக்கிறோமோ......
எந்தத் திருமகனின் திரு உருவத்தை
நமது கழகக் கொடி தாங்கி கொண்டிருக்கிறதோ......**

**அந்தப் பெருமகன், அந்தத் திருமகன்,
பேரறிஞர் அண்ணா அவர்கள், பிறந்த
பெருமைக்குரிய மண், இந்த மண்”.
இதை நினைத்துப் பார்க்கும் போது
காஞ்சிக்கும் நம்முடைய கழகத்திற்கும்
உள்ள தொடர்பு எவ்வளவு வலிமையானது,
எவ்வளவு பெருமையானது,
எவ்வளவு அருமையானது”** என
பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்.

ஒரு சாமான்யனும் சரித்திரமாகலாம்
என உலகிற்கு உணர்த்திய
பேரறிஞர் அண்ணா அவர்களை பாராட்டுகிற நாம்,
பேரறிஞர் அண்ணா அவர்களையே உருவாக்கிய
இந்த காஞ்சிபுரத்தையும் பாராட்டிட நான்
கடமைப் பட்டுள்ளேன்.

திராவிடக் கொள்கைகளை தமிழ் மண்ணில் தூவி
தமிழனை சுயமாக சிந்திக்க வைத்த பெருமை
தந்தை பெரியாரையும், பேரறிஞர்
அண்ணாவையும் சாரும்.

தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சுயசிந்தனையும்தான்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை
திராவிட இயக்கத்தின்பால் ஈர்த்தது.

காங்கிரஸ் இயக்கத்திலிருந்த
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்,
1952ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு
அறிமுகமாகி, அவருடைய பேச்சாலும், எழுத்தாலும்,
சிந்தனையாலும் கவரப்பட்டு தன்னை ஒரு
முழுநேர திராவிட இயக்கத் தொண்டனாக
மாற்றிக் கொண்டார்கள்.

அதன்பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களை
தன் தலைவராக ஏற்றுக் கொண்ட
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், கழகப்பணியுடன் பொதுப்பணியும்
ஆற்றத் தொடங்கினார்கள்.

திராவிட இயக்கத்தின் இதயத்துடிப்பாய்....
எதிர்காலமாய்.... மாறிய
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
பேரறிஞர் அண்ணாவின் ‘இதயக்கனி’யாகவும் மாறி
தொண்டர்களின் உயிர் மூச்சாய் இன்றளவும் உள்ளார்.

தன் படங்களின் மூலம்
பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை
வசனங்களாகவும், பாடல்களாகவும்
மக்களிடம் எடுத்துச் சென்றவர்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

“நேற்று இன்று நாளை” என்ற திரைப் படத்தில்
அண்ணாவைப் புகழ்ந்து,
**“நாட்டுக்காக உழைப்பதற்கே
அண்ணா பிறந்தார்**

**பொது நலத்தில் தானே
நாள் முழுக்க கண்ணாயிருந்தார்**

**ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம்
பெருமையைத் தந்தார்**

**தன் இனிய குடும்பம் ஒன்றுக்குத்தான்**
**வறுமையைத் தந்தார்''**

என்று பேரறிஞர் அண்ணாவைப் பற்றிப்
புரட்சித்தலைவர் ஆழமாகப் பாடியிருப்பார்.

அதே பாடலின் துவக்கத்தில்
**''தம்பி நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று**
**அதை நான் உனக்கு சொல்லட்டுமா இன்று''** என்றும்

**''நல்லவருக்கு வாழ்வு வரும் நாளை – இது**
**அறிஞர் அண்ணா எழுதி வைத்த ஓலை''**
என்றும் பாடியிருப்பார்.

**''நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று''** என்றால்
காஞ்சியில் பிறந்த கழகத் தலைவனிடம்

தான் கற்றுக்கொண்ட ''கடமை கண்ணியம்,
கட்டுப்பாடு" என்ற கோட்பாட்டை தான்,
அப்படி மாண்புமிகு புரட்சித்தலைவர்
அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக் கட்டளையை
ஏற்று புரட்சித்தலைவர் அவர்கள் 1967ஆம் ஆண்டு
இதே காஞ்சிபுரம் மாவட்டம் பரங்கிமலை
தொகுதியிலிருந்து முதன்முதலில்
சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
பேரறிஞர் அண்ணாவின் பெயரால் தனிக் கட்சி
தொடங்கி நடத்திய முதல் கூட்டம்
இதே காஞ்சிபுரத்தில்தான் நடந்திருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களை பாராட்டும்போது

**‘பாரி வள்ளலுக்கு ஒரு பரம்புமலை,**
**புரட்சித் தலைவருக்கு ஒரு பரங்கிமலை’** என்றும்

**“பேரறிஞர் அண்ணா அவர்களை பெற்றதாலும்,**
**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை**
**அரசியலுக்கு அறிமுகப்படுத்தியதாலும்,**
**காஞ்சிபுரம் கழக கண்மணிகளுக்கு சொந்த மண்”**
என்றும் பாராட்டியுள்ளார்கள்.

எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
ஆசியால் முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள நான்....
இந்த மண்ணில் இன்று நான் உங்களிடம்
பேசிக்கொண்டு இருப்பதை, என் வாழ்நாளில்
ஒரு மறக்க முடியாத நிகழ்வாக கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1968–ஆம் ஆண்டு முதலமைச்சராக
இருந்தபோது சென்னையில்
இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது.
அப்போது, சென்னை அண்ணா சாலையில்
கையை உயர்த்தி கம்பீரமாக நிற்கும்
பேரறிஞர் அண்ணாவின் உருவச் சிலையை
தனது சொந்தச் செலவில் நிறுவியவர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

சிலை வைப்பதற்காக பேரறிஞர் அண்ணாவை
படம் எடுத்து வர ஒரு புகைப்படக் கலைஞரை
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா ஐந்து விரல்களைக்
காட்டி புகைப்படம் எடுக்கச் சொன்னார்.
அதற்கு ‘அய்யா, உங்களை ஒரு விரல் காட்டித்தான்
படம் எடுத்து வரச் சொன்னார்’ என்றார்
புகைப்படக் கலைஞர்.

‘தம்பி ராமச்சந்திரன் சொன்னால்
அதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும்’
என்று ஒரு விரல் காட்டி நின்றார், அண்ணா.

பிறகு மாண்புமிகு புரட்சித்தலைவரைப் பார்த்த போது,
'ஐந்து விரலைக் காட்டினால் நம் கழகத்தின்
சின்னத்தைக் குறிக்கும், ஒரு விரலைக் காட்டினால்
என்ன அர்த்தம் ?' என்று கேட்டார்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்,
என்ற உங்கள் பொன்மொழியை மக்கள்
புரிந்து கொள்வார்கள்' என்றார்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மக்களுக்கான பொது தத்துவம்தான்
முக்கியம் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களின் மனித நேயத்தை
பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டினார்கள்.

இந்த மனித நேயம்தான் மாண்புமிகு புரட்சித்தலைவரை
'மக்கள் திலகமாக' மாற்றியது.

அதனால்தான், 1965–ஆம் ஆண்டு
எங்க வீட்டுப் பிள்ளை
படத்தின் வெள்ளி விழாவில் பேரறிஞர் அண்ணா
அவர்கள் ஆற்றிய உரையில்,

"அரசியலில் பொறுப்பேற்றுச் செயல்பட்டால்
அதிலும் எம்.ஜி.ஆர். அவர்கள்,
அவருடைய தனிமுத்திரையை பதிப்பார்"
என்று அரசியல் ஆரூடம் சென்னார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆரூடம்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களை
1977 –இல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக்கியது.

இரும்புத்திரைக்குள் இருந்து கொண்டு
வெளி உலகை எட்டிப்பார்க்காத திரைப்பட நடிகர்களில் முதன்முதலில் அந்த
திரையைக் கிழித்துக் கொண்டு பொது மக்களைப் பார்த்த

ஒரு மகத்தான நடிகர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்தான்

என்பதை அப்போதே சுட்டிக் காட்டியவர்
பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களுக்குப் பிறகுதான் அவரைப் பின்தொடர்ந்து
பல திரைக்கலைஞர்கள் அரசியலில்
நுழைய ஆரம்பித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களைப் பார்த்துத்தான் பல நடிகர்கள்,
தான் சம்பாதித்த பணத்தை மக்களுக்காக
செலவு செய்ய ஆரம்பித்தார்கள்.

**"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"**
என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின்
தாரக மந்திரத்தை ஏற்று
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
தன்னுடைய சம்பாத்தியத்தை
அள்ளி அள்ளிக் கொடுத்தார்.

திராவிட இயக்கம் தமிழ் மண்ணில் வேரூன்றுவதற்கு
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் உழைப்பை மிக முக்கியமானதாக
பேரறிஞர் அண்ணா அவர்கள் கருதினார்கள்.

**"எம்.ஜி.ஆர் அவர்கள் தன் அன்பு முகத்தை**
**ஊர் ஊராய் கிராமம் கிராமமாக காண்பித்தால் போதும்,**
**நாம் வெற்றி பெற்றுவிடுவோம்"** என்று
பேரறிஞர் அண்ணா அவர்கள்
வெளிப்படையாகவே பேசினார்கள்.

அந்த அன்பு முகம்தான் 1967ல்
பேரறிஞர் அண்ணா அவர்களை அரசு கட்டிலில்
அமர வைத்து அழகு பார்த்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போல
எதிர்காலத்தை கணிக்கும்
தொலை நோக்கு பார்வை கொண்டவர்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதற்கு அவருடைய
"நம்நாடு" திரைப்படப் பாடல் அமைந்திருந்தது.

**‘‘வாங்கய்யா வாத்தியாரய்யா, வரவேற்க வந்தோமய்யா,**
**ஏழைகள் உங்களை நம்பி, எதிர்பார்த்து நின்றோமய்யா’’**
என்று பாடி, தமிழ்நாட்டுக்குத் தலைமை ஏற்க
மாண்புமிகு புரட்சித் தலைவரை வரவேற்றார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவருக்குப் பிறகு,
மாண்புமிகு அம்மா அவர்கள், கழகத்தைக் காப்பாற்ற எத்தனை அவமானங்களையும்,
துன்பங்களையும் சந்தித்திருப்பார்கள் என்பது
ஒவ்வொரு கழகத் தொண்டனுக்கும்
தெரிந்திருக்கும்.

‘‘எனக்குப் பிறகும் இந்தக் கழகம்
100 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி அதிகாரத்தில் இயங்கும் என்பதை
சுட்டிக்காட்டினார்கள் சட்டமன்றத்திலேயே.

பேரறிஞர் அண்ணாவின் உருவத்தில்,
மாண்புமிகு புரட்சித்தலைவரின் எண்ணத்தில்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உழைப்பில், கழகத் தொண்டர்களின் ஒற்றுமையில்,
இந்த ஆட்சி மேலும் வலிமை பெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்காகத்தான்.......
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா வழியில்
செயல்படும் இந்த அரசு அரிய பல திட்டங்களை
விரைவாகச் செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாகத்தான்
காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்று
நிறைவடைந்த பல திட்டங்களை
தொடங்கி வைப்பதிலும்,

பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும்,
பல நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும்,
நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் 10 இடங்களில்
16 கோடியே 10 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய்
செலவில் கட்டப்பட்ட கட்டடங்கள்;

பேரூராட்சித்துறை சார்பில் மாடம்பாக்கம்,
பீர்க்கன்கரணை, திருநீர்மலை, மாங்காடு,
உத்திரமேரூர், பெருங்களத்தூர், கருங்குழி,
ஆகிய இடங்களில்
27 கோடியே 24 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய்
செலவில் திருமண மண்டபம்,
நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்ற கட்டடங்கள்,

தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் சார்பில்
கருங்குழி மற்றும் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிகளில்
13 கோடியே 15 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய்
செலவில், குடிநீர் வழங்கும் பணிகள்; உட்பட
மொத்தம் 77 கோடியே 41 இலட்சத்து
71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 58 பணிகள்
இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில்
8 கோடியே 62 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டில் 17 பணிகள்;
பொதுப்பணித் துறை சார்பில்
படப்பை, பழவந்தாங்கல், பல்லாவரம்,
L.எண்டத்தூர் ஆகிய இடங்களில் 4 கோடியே
91 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டில் 4 பணிகள்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்
சார்பில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள்,
ஆதி திராவிட நலத்துறையின் சார்பில்
5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் 8 பணிகள்;

கல்வித்துறையின் சார்பில் 4 கோடியே
6 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்
3 பணிகள்;

2 இலட்சத்து 70 ஆயிரத்து 458 மக்கள்
பயனடையும் வகையில் 600 கோடி ரூபாய்
மதிப்பீட்டில் காஞ்சிபுரம் நகராட்சிக்கு திருவண்ணாமலை கூட்டுக்குடிநீர்த்
திட்டத்திலிருந்து கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டம் என

32 கோடியே 34 இலட்சத்து 36 ஆயிரம்
ரூபாய் மதிப்பீட்டில் 37 பணிகளுக்கு இன்று
அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதைப்
பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த
அரசு மிகக் குறுகிய காலத்தில் செய்து முடித்த ஒருசில திட்டங்களை
இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
ஆசியோடு அம்மாவுடைய அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்து
இன்று வரை மாநிலம் முழுவதும் நிறைவடைந்த
7 ஆயிரத்து 301 கோடியே 71 இலட்சம் ரூபாய்
மதிப்பீட்டிலான 33 ஆயிரத்து 191 திட்டப்பணிகளை
தொடங்கி வைத்தும்,

2 ஆயிரத்து 93 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 ஆயிரத்து 215
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்
பாரத ரத்னா புரட்சித்தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழா நடைபெறுவதையொட்டி

24 ஆயிரத்து 269 பயனாளிகளுக்கு
166 கோடியே 2 இலட்சத்து 66 ஆயிரத்து
107 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்
தற்போது வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்த
காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு தனித்துவம் கொடுத்து
திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேவையறிந்து இன்னும் பல திட்டங்களை இந்த
அரசு வழங்க இருக்கிறது என்பதையும்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காஞ்சித் தலைவனின் பெயரைத் தாங்கி வளர்ந்திருக்கிற இந்த மாபெரும் இயக்கத்தை
எந்த சக்தியாலும் ஒடுக்கி விட முடியாது
என்பதை நாங்கள் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த இயக்கத்தைப் பாதுகாக்க,
கழகக் கண்மணிகள் அனைவரும்
ஓரணியில் நிற்போம் என்றும்
அதற்காக எந்தத் தியாகம் செய்வதற்கும் நாங்கள்
தயாராக இருக்கிறோம் என்றும்,

சுய நலத்திற்காக, கழகத்தை கூறுபோட
ஒருக்காலமும் நாங்கள் சம்மதிக்க மாட்டோம் என்றும்,
பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்தப் புனித மண்ணில் இருந்தபடி சபதம் ஏற்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இன்றைக்கு ஏராளமான திட்டங்களை நாம் செய்து முடித்திருக்கின்றோம். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இருபெரும் தலைவர்களும் கண்ட கனவை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

கிராமம் செழிக்க வேண்டும். கிராமத்திலிருக்கின்ற ஏழை, எளிய, உழைப்பாளி, விவசாயி, விவசாயத் தொழிலாளி முன்னுக்கு வரவேண்டும், சமூகப் பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டுமென்று இரவு, பகல் பாராமல் இரண்டு பெரும் தலைவர்களும் உழைத்தார்கள். அந்த உழைத்த தலைவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுகின்றவிதமாக அம்மாவினுடைய அரசு செயல்படும், செயல்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் ொொண்டு, இந்த மண்ணிலே தான், காஞ்சிபுரம் மாவட்டத்தில், முதன்முதலில் மணிமங்கலத்தில் குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை நாம் துவக்கி வைத்தோம். இந்த திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். அதிகமாக ஏரி, குளங்கள் நிறைந்த மாவட்டம் காஞ்சிபுரம். கிட்டத்தட்ட 2000 ஏரிகளைக் கொண்ட மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம். 4000 குளங்கள், குட்டைகள் இருக்கின்ற மாவட்டம். முழுக்க, முழுக்க இந்த

மாவட்டத்திலிருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள் அந்த நீரைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்கின்றார்கள், குடிநீருக்குத் தேவையான நீரைப் பெறுகின்றார்கள். ஏரிகள், குளங்கள், குட்டைகள் நிறைந்த இந்த மாவட்டத்திலே பருவமழை மூலம் பொழிகின்ற மழை நீர் முழுவதும் சேமித்து வைப்பதற்காக, குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை இந்த மாவட்டத்திலே துவக்கி வைத்திருக்கின்றேன் என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். அன்று துவக்கி வைக்கப்பட்ட அந்தத் திட்டம், இன்றைக்கு நிறைவு பெறவிருக்கின்றது. முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளின் பங்களிப்புடன், அரசும் சேர்ந்து, 1519 ஏரிகளை தூர்வாரும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெறவுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் திட்டத்தை மேலும் விரிவடையச் செய்து கிட்டத்தட்ட 2065 ஏரிகள், 300 கோடி ரூபாய் திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

விவசாயிகளுக்கு வண்டல் மண் ஒரு சிறந்த உரமாக இருக்கின்றது. விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு இடுகின்றபொழுது அவர்கள் செய்கின்ற பயிர் சாகுபடிகளுக்கு விளைச்சல் அதிகமாக கிடைக்கிறது. மண் பதப்படுத்தப்படுகின்றது. இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலமாக, 23 மாவட்டங்களில் 787 ஏரிகள் வாய்க்கால் மதகுகள் புதுப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக, பொழிகின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு விவசாயிகள் பயன்பாட்டிற்கு வாய்ப்பாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலே ஓடைகள், ஆறுகளில் ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, பொழிகின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு, நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக, மூன்றாண்டுகளில் ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு அம்மாவினுடைய அரசால் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு

அதற்காக ரூபாய் 350 கோடி ஒதுக்கீடு தடுப்பணைகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளை பத்திரமாக வைப்பதற்காக Godown-கள் கட்டப்படுகின்றன. 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை அம்மாவினுடைய அரசு பல்வேறு Godown-களை கட்டி விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்தரவாதத்தை அளித்திருக்கின்றது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்கு ஒரு சில காலக்கட்டத்தில் விளை குறைந்து விடுகின்றது. விளை குறைகின்றபொழுது, அந்த விவசாயி, விளைபொருளை அந்த Godown–ல் வைத்து குறைந்த வட்டியிலே கடனை பெற்றுக்கொள்ளலாம். விலை உயரும்பொழுது அதை விற்பனை செய்து அவர்கள் லாபம் ஈட்டிக்கொள்ளலாம். அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை அம்மா அவர்கள் விவசாயிக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அம்மாவினுடைய ஆட்சியில் நிறைய திட்டங்களை விவசாயிகளுக்கு செய்ததின் விளைவு 2011 முதல் 2016 வரை நான்கு முறை தமிழ்நாடு 100 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிக உணவு தானிய உற்பத்தி செய்து உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்காக மத்திய அரசிடமிருந்து ஐந்து ஆண்டுகளில், 4 முறை கிரிஷி கர்மாண் விருது தமிழகம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு 140 ஆண்டுகாலம் இல்லாத கடுமையான வறட்சி நிலவியிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட வறட்சியான நிலையில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விவசாயிகளை பாதுகாப்பதற்காக, வறட்சியிலிருந்து விவசாயிகளை மீட்பதற்காக விவசாயிப் பெருங்குடி மக்களுக்கு இடுபொருள் மானிய நிவாரணமாக 2247 கோடி ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்து, விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல, புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பீட்டு திட்டத்தின் வாயிலாக காப்பீட்டு தொகையை பெற்றுத் தந்துகொண்டிருக்கின்றோம். இதுவரை 1882 கோடி ரூபாய் இழப்பீட்டு தொகையை விவசாயிகளுக்கு பெற்றுத் தந்திருக்கின்றது. படிப்படியாக, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். அதேபோல, அம்மாவினுடைய அரசு விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக இருந்துகொண்டிருக்கின்றது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தென்னை விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெற நீராபானம் தயாரிப்பதற்கும் அம்மாவினுடைய அரசு. அம்மாவினுடைய அரசு விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தென்னை விவசாயிகளுடைய வாழ்வு வளம்பெற நீராபானம் தயாரிப்பதற்கும் அம்மாவினுடைய அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. இதனால் தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகள் லாபம் அடைவார்கள் என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உழவர் பாதுகாப்பு திட்டம் - இயற்கை மரணம் அடையும் விவசாயிகள் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட ரூ.10000/-ல் இருந்து ரூ.20000/- ஆக இன்றைக்கு உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஒரு நாட்டினுடைய வளர்ச்சி கல்வியை மையமாக வைத்துத்தான் இருக்கிறது. ஒரு நாடானாலும் சரி, மாநிலமானாலும் சரி அந்த மாநிலத்திலும், நாட்டிலும் எந்த அளவுக்கு கல்வி வளர்ச்சி இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் பொருளாதாரம் மேம்பாடு அடைய முடியும். இன்றைக்கு அப்படிப்பட்ட வளர்ச்சி அம்மாவினுடைய ஆட்சியிலே பார்க்க முடிகின்றது. ஆகவே, இன்று அம்மாவினுடைய ஆட்சியில் தான் உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. 2011 ஆம் ஆண்டு அம்மா ஆட்சிப் பொறுப்பேற்கின்றபொழுது 100—க்கு 21 பேர் உயர்கல்வி படித்தார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே புரட்சி செய்த காரணத்தினால், 2016—ஆம் ஆண்டு உயர்கல்வி சேர்க்கை விகிதம் 44.3 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 100—க்கு 44.3 பேர் உயர்கல்வி படிக்கிறார்கள் என்று சொன்னால், 21 சதவீதத்திலிருந்து 44.3 சதவீதம் என்று சொன்னால், 23.3 சதவீதம் இன்று உயர்ந்திருக்கிறது. அந்த அளவிற்கு அம்மாவினுடைய ஆட்சியிலே கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள், கல்விக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனால், கிராமத்திலே வாழ்கின்ற மாணவ, மாணவியரும் சரி, நகரத்திலே வாழ்கின்ற மாணவ, மாணவியரும் சரி, ஏழை மாணவ, மாணவியர்களானாலும் சரி, அத்தனை பேரும் உயர்கல்வி படிக்கக்கூடிய எண்ணத்தை உருவாக்கிய முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில்

பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆறாண்டு காலத்திலே 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 21, பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி 24, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி 16, பொறியியல் கல்லூரி 4, இந்த ஆண்டு அரசு அறிவியல் கல்லூரி 8, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி 3 என்று பல கல்லூரிகளை உருவாக்கித்தந்த காரணத்தினால்தான் ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே படிக்கக்கூடிய வாய்ப்பை அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு நாடு பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால், கல்வி முக்கியம். அந்தக் கல்வியை உயர்த்தி சாதனை படைத்த முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2012–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரே நாளில் 21,800 பள்ளி ஆசிரியர்களையும் சென்னைக்கு வரவழைத்து வேலைவாய்ப்பு ஆணை வழங்கி சாதனை புரிந்து சரித்திரம் படைத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இவைதவிர, 438 கோடி ரூபாய் செலவில் உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், 60 கோடி ரூபாய் செலவில் அறிவுத்திறன் வகுப்பறைகள் மற்றும் நடப்பாண்டில் 397 கோடி ரூபாய் செலவில் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படும்.

அதேபோல, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழைக்குடும்பத்தினருக்கு 2015 முதல் நடப்பாண்டு வரை 11,457 கோடி ரூபாய் செலவில் 3,28,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வீடுகட்டுவதற்கு 2,10,000 ரூபாய் மானியமாக மத்திய, மாநில அரசால் வழங்கப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களை நேரிலே சந்தித்து வலியுறுத்தியதின் காரணமாக பல்வேறு திட்டங்களில் மத்திய அரசின் உதவியை பெறுவதற்கு வழிவகுத்து, இதன் காரணமாகவே, இராமேஸ்வரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தமிழகத்திற்கு எத்தனை இலட்சம் வீடுகள் கேட்டாலும்

கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே தெரிவித்தார்கள்.

நெசவுத்தொழில் நிறைந்த மாவட்டம் இந்த காஞ்சிபுரம் மாவட்டம். அந்த நெசவாள பெருமக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு மின்கட்டண சலுகை செய்த அரசு.

இந்த ஆண்டு, கிட்டத்தட்ட 68 சதவீதம் மழை குறைவாக பொழிந்ததன் காரணமாக, நிலத்தடி நீர் 1000 அடிக்குக்கீழ் சென்று, கடுமையான குடிநீர் பிரச்சினையை சமாளிப்பதற்காக, நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான இடங்களில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து உடனடியாக, தங்குதடையின்றி, குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

2016–17–ஆம் ஆண்டில் 28,71,000 மக்கள் பயன்பெறும்வகையில் 901 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

2016ஆம் ஆண்டு, தேர்தல் நேரத்தில், கழகத்தின் சார்பாக அம்மா அவர்களால் வழங்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, கருவுற்ற தாய்மார்களுக்கு ரூபாய் 12,000–லிருந்து ரூபாய் 18,000–மாக அம்மாவினுடைய அரசால் உயர்த்தி வழங்கப்படுகின்றது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், கருவிலேயே குழந்தை நன்றாக வளர வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு சிந்தித்து, சஞ்சீவி கிட், 16 பொருட்களைக் கொண்ட அம்மா பரிசுப் பெட்டகம் வழங்கி ஆட்சி செய்த அரசு அம்மாவினுடைய அரசு. மக்களுக்கு தேவையானதை பார்த்துப் பார்த்து திட்டங்களைத் தந்த முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

வல்லரசு நாடுகளில்கூட இல்லாத அளவிற்கு, பள்ளியில் படிக்கின்ற ஏழைக் குழந்தைகளுக்கு, ரூபாய் 14,000 மதிப்பு கொண்ட மடிக்கணினியை வழங்கி உயர்கல்வி கற்க வசதி செய்து கொடுத்த ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். காலத்தால் அழிக்க முடியாத திட்டங்கள், உயிரோட்டமான திட்டங்களை உருவாக்கித் தந்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையாக 57000 பயனாளிகளுக்கு ரூபாய் 13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைக்கு பதிலாக, ஸ்மார்ட் கார்டு வழங்குவதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அம்மாவினுடைய அரசு சிறப்பான ஆட்சி தந்து கொண்டிருக்கின்றது. பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மற்றும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவையும் நனவாக்குவதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற அரசு அம்மாவினுடைய அரசு.

இந்த அரசை எப்படியாவது வீழ்த்திவிடலாம் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். கொள்ளைப்புறத்தின் வழியாக ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று கனவு கண்டால் ஒருபோதும் நடக்காது. பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இந்த இயக்கத்தை உருவாக்குகின்றபோது, எவ்வளவு ஏச்சுக்களுக்கும், பேச்சுக்களுக்கும், துன்பங்களையும் அடைந்தார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரியும். அவர் இரத்தத்தைத் சிந்தி இந்த இயக்கத்தை உருவாக்கியிருக்கின்றார். அதைக் கட்டிக்காத்த பெருமை அம்மாவைச் சாரும். இரவு, பகல் பாராமல் உழைத்து, தன் உயிரையே இந்த மண்ணிலேவிட்டு, இந்த கழகத்திற்கும், ஆட்சிக்கும் தியாகம் செய்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே வாழ்நாள் முழுவதும் அந்த இருபெரும் தலைவர்களும் இந்த மக்களுக்காக உழைத்து இந்த இயக்கத்தையும், கட்சியையும் கட்டிக் காத்திருக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதே அத்தனை தொண்டர்களின் இலட்சியம், இலட்சியம் என்று இந்த நேரத்திலே சூளுரை ஏற்போம். எந்த தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். எத்தனை இடர்பாடுகளையும் தவிடுபொடியாக்கி அதை சாதித்துக்காட்டக்கூடிய ஆற்றல், வலிமையை அவர்கள் நமக்கு தந்துவிட்டு சென்றிருக்கின்றார்கள். ஆகவே, கனவு கண்டுகொண்டிருப்பவர்களுக்கு சொல்லிக்கொள்கின்றேன், இந்த ஆட்சியையோ, கட்சியையோ அசைக்கவே, ஆட்டவோ ஒருக்காலும் முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டாவது முறையாக, தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியை தக்கவைத்து, இன்றைக்கு ஒரு மகத்தான ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது. எங்கே உழைப்பு இருக்கின்றதோ அங்கே உண்மை இருக்கும், அந்த உண்மை வெல்லும், வெல்லும். நாம் எதற்கும் அஞ்சப்போவதில்லை. நம் இரு தலைவர்கள் காட்டிய பாதையில் சென்று

கொண்டிருக்கின்றோம். நம்முடைய ஆட்சியும், கட்சியும் இந்த மண்ணிலே நிலைத்து நிற்கும்.

## காஞ்சிபுரம் மாவட்டம் – அறிவிப்புகள்

- காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள செங்கழு நீரோடை தெரு ‘‘டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சாலை’’ எனவும், கிழக்கு ராஜ வீதி ‘‘டாக்டர் புரட்சித் தலைவி அம்மா சாலை’’ எனவும் பெயரிடப்பட்டு அழைக்கப்படும்.

- காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கம், ‘‘பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கம்’’ என பெயர் மாற்றம் செய்யப்படும்.

- காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள திருப்புலிவனம் கிராமத்தில் இயங்கி வரும் உத்திரமேரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ‘‘புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி’’ என பெயர் சூட்டப்படும்.

- காஞ்சிபுரம் அருகில் கீழ்கதிர்பூர் கிராமத்தில் காஞ்சிபுரத்திற்கென புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

- காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

## தடுப்பணைகள் கட்டுதல்

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழைக்காலங்களில் வெள்ள நீர் பாலாறு வழியாக வீணாக கடலில் கலப்பதை தடுக்கும் பொருட்டு, பாலாற்றின் குறுக்கே, மதுராந்தகம் வட்டம், ஈசூர்–வள்ளிபுரம்; வாலாஜாபாத் வட்டம், வெங்குடி மற்றும் உள்ளாவூர்; திருக்கழுக்குன்றம் வட்டம், வாயாலூர்; செங்கல்பட்டு வட்டம், பழவேலி மற்றும் பாலூர்; காஞ்சிபுரம் வட்டம், வெங்கடாபுரம் ஆகிய ஏழு இடங்களில் தடுப்பணைகள் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- திருக்கழுகுன்றம் வட்டம், நல்லாத்தூர் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இந்நிலையில் திருக்கழுகுன்றம் வட்டத்தில் வாயலூர் கிராமத்தின் அருகே நிலத்தடி நீர் மாசுவடாத வண்ணம் கடல்நீர் உள்புகாமல் தடுப்பதற்கு, தரைமட்ட தடுப்பணை கட்ட கோரிக்கை

எழுந்துள்ளதால், விரிவான ஆய்வு மேற்கொண்டு தடுப்பணை கட்டுவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் ஏதுமின்மையால், இம்மாவட்ட மீனவ மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், கழிவேலி பக்கிங்காம் கால்வாயின் முகத்துவாரத்தில் இரு பக்கங்களிலும் ஆலம்பரி குப்பம் மற்றும் அழகன் குப்பத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு **புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறும் இவ்விடத்திற்கு அருகில் உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு ஒரு சிறப்பு உண்டு.

இப்பூங்கா மாண்புமிகு **புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்களின் திருக்கரங்களால் **7.3** கோடி ரூபாய் செலவில் **24.07.1985–**ம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மனிதர்கள் மட்டுமின்றி, விலங்குகளிடமும் அன்பு செலுத்தும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பூங்காவிற்கு இருமுறை வருகை தந்து, இங்கு இயற்கையுடன் திறந்தவெளியில் சுதந்திரமாக உலாவும் விலங்குகளிடமும் அன்பு செலுத்தி, இங்கு உள்ள சிங்கக் குட்டிகளுக்கும், புலிக் குட்டிகளுக்கும் பெயர் சூட்டியதை நினைவு கூர்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தியாவில் முதன்மைப் பெற்று விளங்குகின்ற வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், **மாண்புமிகு புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்களுடைய பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இன்று நடைபெற்ற மரம் நடும் விழாவில் பங்குபெற்று நாவல் மரக்கன்றினை நட்டுவைத்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய நூற்றாண்டு விழா சீரோடும் சிறப்போடும் இருக்க வேண்டும்
என்பதற்காக இரவு பகல் பராமல் இந்த பணியினை மேற்கொண்ட
மூன்று மாவட்ட செயலாளர் அவர்களுக்கும்,
அருமை சகோதரர் திரு.சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களுக்கும்,
அருமை சகோதரர் திரு. வாலாஜாபாத் கணேசன் அவர்களுக்கும்,
அருமை சகோதாரர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கும்

அவரோடு இணைந்து பணியாற்றிய
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும்,
மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா. பெஞ்ஜமின்,
அவர்களோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும்,
அத்தனை நல்ல உள்ளங்களுக்கும்
உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்!

நன்றி! வணக்கம்!

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**